அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# அழைப்பொலி

ஓங்கி ஒலிக்கும் எட்டுத் திக்கும்...

மாத இதழ்

அழைப்பு: 1 ஒலி: 1

ரமளான் 1438 | ஜூன் 2017

தனிச்சுற்றுக்கு மட்டும்

இஸ்லாம் குறித்த ஐயங்களை மனம் விட்டுப் பேச...



Toll Free: 1800 2000 787

இறைச்செய்தியை இலவச மாதத் தாங்கி வரும் முதல் இஸ்லாமிய மாத இதழ் உங்கள் பகுதியிலும் பள்ளிவாசல்களிலும் விநியோகிக்கவும் விளம்பரத் தொடர்புக்கும் அணுகவும்: 98849 28787

2 அழைப்புப்பணி நம் உயிர் மூச்சு...






3 ரமளானே வருக!

6 நாம் என்ன செய்ய வேண்டும்?



8 திருக்குர்ஆன் போதிப்பது இதுதான்!...



# ரம்யமயமாகும் ரமளான் மாதம்!

இறைவன் ரமளான் மாதத்தைப் புகழ்ந்து பேசுகின்றான். மகத்தான அல்குர்ஆனை இறக்கியருள்வதற்கு இந்த மாதத்தையே அவன் தேர்ந்தெடுத்தான். நபி (ஸல்) அவர்கள் ரமளான் மாதத்தின் வருகை குறித்து மகிழ்ச்சி அடைவார்கள். மகிழ்ச்சியைத் தமது தோழர்களிடமும் பகிர்ந்து கொள்வார்கள்.

நபி(ஸல்) அவர்கள் கூறுவார்கள்: உங்களிடம் ரமளான் மாதம் வந்துள்ளது. அது மகத்துவமிக்க மாதம். அருள்வளம் நிறைந்த மாதம். அந்த மாதத்தில் நோன்பு நோற்பதை உங்கள் மீது இறைவன் கடமையாக்கியுள்ளான். அந்த மாதத்தில் சுவனத்தின் வாசல்கள் திறந்து வைக்கப்படுகின்றன. நரகத்தின் வாயில்கள் அடைக்கப்படுகின்றன. ஷைத்தான்கள் விலங்கிடப்படுகின்றனர். (நூல்: அஹ்மத், நஸயீ)

கல்விச் சேவையில் 9ஆம் ஆண்டை நோக்கி..!

PRESTON INTERNATIONAL COLLEGE
Education and Beyond

பிரஸ்டன் பன்னாட்டுக் கல்லூரி

#10, K.B. தாசன் சாலை, ஆழ்வார் பேட்டை, சென்னை - 18

Affiliiated to

MANONMANIAM SUNDARANAR UNIVERSITY TIRUNELVELI

A Unit of PERF
Professional Education and Research Foundation

சேர்க்கை நடைபெறுகிறது

B. A. இஸ்லாமியக் கல்வி - நேரடி/தொலைதூரக் கல்வி
M. A. இஸ்லாமியக் கல்வி - தொலைதூரக் கல்வி

ஆங்கிலம்/தமிழ் வழிக் கல்வி

தலை சிறந்த மார்க்க அறிஞர்களிடம் கல்வி பயில அரியதோர் வாய்ப்பு தவற விடாதீர்..!

சிறப்பம்சங்கள்

- மதீனா, உம்முல் குரா, மஃஹதுல் ஹரம், தாருல் ஹுதா - இலங்கை, ஜாமிஆ தாருஸ் ஸலாம் - உம்ராபாத் மற்றும் தமிழக முன்னனி கல்வி நிறுவனங்களின் பாடத்திட்டங்களை முன்மாதிரியாகக் கொண்டு வரையறுக்கப்பட்ட இஸ்லாமியத் துணைப் பாடங்கள்.
- இஸ்லாமியச் சூழலில் கல்லூரி வளாகம்.
- வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் உயர் படிப்பைத் தொடர்வதற்கு வாய்ப்பு.
- M.A. / M.B.A. போன்ற மேற்படிப்புகளைத் தொடர்வதற்கான வாய்ப்பு.
- படிப்பை நிறைவு செய்தபின் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் கல்வி மற்றும் நிர்வாகத் துறைகளில் வேலை வாய்ப்புக்கான வழிகாட்டல்.
- சகோதரிகளுக்கு இஸ்லாமியச் சூழலில் பாதுகாப்பான விடுதி வசதி.
- மிகச் சிறந்த நூல்களின் தொகுப்புகளைக் கொண்ட நூலகம்.
- கண்காணிப்பு கேமராக்களுடன் வடிவமைக்கப்பட்ட வகுப்பறை மற்றும் வளாகம்.
- தகுதியுடைய மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை.

FOR ENQUIRY

044-24353113/ 42111365
9941678784
info@prestonchennai.ac.in
www.prestonchennai.ac.in

## இறையச்சமே இலக்கு:

‘ஈமான் கொண்டோர்களே! உங்களுக்கு முன் இருந்தவர்கள் மீது நோன்பு விதிக்கப்பட்டிருந்தது போல் உங்கள் மீதும் (அது) விதிக்கப்பட்டுள்ளது. (அதன் மூலம்) நீங்கள் இறையச்சமுடையோர் ஆகலாம்.’ (2:183)

இஸ்லாத்தின் பிரதான ஐந்து கடமைகளில் ஒன்றான நோன்பின் முக்கிய நோக்கமாக இறைவன் இறையச்சத்தையே குறிப்பிட்டுக் காட்டுகின்றான்.

அல்லாஹ்வின் பார்வை என்னை சூழ்ந்துள்ளது. எனக்கு பசித்தாலும், தாகித்தாலும், இச்சை கொண்டாலும் நான் பொறுத்துக் கொள்வேன். யாரேனும் ஏசினால் சகித்துக் கொள்வேன். பொய் சொல்ல மாட்டேன், ஏமாற்ற மாட்டேன், குறைகூற மாட்டேன், கோல் சொல்லமாட்டேன், அவதூறு பரப்ப மாட்டேன், பிறர் பொருளை அபகரிக்க மாட்டேன், பிறருக்கு தொந்தரவு தரமாட்டேன், அனைவரிடமும் அன்புடன் நடந்துகொள்வேன். ஏனெனில், நான் நோன்பு வைத்திருக்கின்றேன். என்னை இறைவன் கண்காணித்துக் கொண்டிருக்கிறான். என்ற பயம் முஃமினை ஆட்கொண்டுள்ளது. சொர்க்கத்தின் மீதான ஆசையும், நரகத்தின் மீதான பயமும் அவனை இறைவனுக்கு இறைஞ்சி வாழ வழிவகுக்கின்றது. நோன்பின் மூலம் நம்பிக்கையாளன் சிறந்ததோர் இறையச்சவாதியாக உருமாறுகின்றான்.

நபி (ஸல்) கூறினார்கள்: உண்மை பேசுகின்ற, தூய்மையான, இறையச்சமுள்ள ஒவ்வொருவரும் சிறந்தவரே! அவரிடம் பாவம் இருக்காது. வரம்பு மீறுதல் இருக்காது. மோசடி இருக்காது. பொறாமை இருக்காது. (நூல்: இப்னு மாஜா)

## பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன

மனிதன் பலவீனமானவன். அவன் தவறு செய்துவிடுகின்றான். அவன் திருந்தி வாழ விரும்புகின்றான். இறைவனிடம் மீள விரும்புகின்றான். அவனுக்கு ரமளான் அழகிய வாய்ப்பைத் தருகின்றது.

> “(இறைவனின் மாபெரும் அருள் நமக்குக் கிடைக்கவிருக்கின்றது என்று அகம் குளிரவேண்டும்! இந்த மகத்துவமிக்க மாதத்தை வரவேற்போம்! நலம் பெறுவோம்! வளம் பெறுவோம்!)”

நபி (ஸல்) கூறினார்கள்: ஒருவர் ரமளான்தோறும் நோன்பு நோற்றால், அது, இரண்டு ரமளானுக்கு இடைப்பட்ட மாதங்களில் நிகழ்ந்துவிட்ட தவறுகளுக்குப் பரிகாரமாக அமைந்துவிடுகின்றது. ஆனால் அவர் பெரும் பாவங்களை விட்டும் தன்னைப் பாதுகாத்துக் கொண்டிருக்க வேண்டும்! (நூல்: முஸ்லிம்)

ரமளானைக் குறித்து நபிகளார் கூறினார்: எவர் ரமளான் மாதத்தில் நம்பிக்கையோடும், நன்மையை எதிர்பார்த்தும் நோன்பு நோற்கின்றாரோ, அவரின் முந்தைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. (நூல்: புகாரி, முஸ்லிம்)

எவர் ரமளானின் இரவுகளில் நம்பிக்கையோடும், நன்மையை எதிர்பார்த்தும், நின்று வணங்குகின்றாரோ அவரது முந்தைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. (நூல்: புகாரி, முஸ்லிம்)

நோன்பு நோற்றல், ஐங்காலத் தொழுகையை ஜமாஅத்துடன் இறையில்லத்தில் தொழுதல், திருமறை ஓதுதல், உபரியான வணக்கங்களில் ஈடுபடுதல், இரவில் தொழுதல், பெற்றோர், உற்றார் உறவினர்களைக் கவனித்தல், அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் வாரி வழங்குதல், தீய பேச்சுகள், தீய செயல்களிலிருந்து விலகி இருந்தல் ஆகிய அனைத்தையும் பேண வேண்டும்.

இறைவனின் மாபெரும் அருள் நமக்குக் கிடைக்கவிருக்கின்றது என்று அகம் குளிரவேண்டும்! இந்த மகத்துவமிக்க மாதத்தை வரவேற்போம்! நலம் பெறுவோம்! வளம் பெறுவோம்!

ஒரு கவிஞர் கூறினார்:

**ரமளான் வந்துவிட்டால்
அதில் வாழ்வதற்கு வாய்ப்புக் கிடைத்தால்
நீ மனஇச்சை எனும் ஆடையைக் கழற்றிவிடு
உனது பாதத்தில் நின்று வணங்கிவிடு..
அழிவைத் தரும் பாவங்களிலிருந்து
உன்னைப் பாதுகாத்துவிடு
குதிரையைப் போன்று
உனது மனதுக்கும் கடிவாளம் போட்டுவிடு
தேவையற்றதை பேசாமல்
உன் நோன்பைப் பாதுகாத்துவிடு
தீமைகளைப் பார்க்காமல்
உன் இமைகளை மூடிவிடு..**

# அழைப்புப்பணி நம் உயிர் மூச்சு...

**தான் அறிந்த மார்க்கச் செய்தியை, பிறருக்கு எடுத்து கூறுவதே, அழைப்பு பணியாகும். இதற்காக முழுமையாக இஸ்லாத்தை அறிந்திருக்க வேண்டுமென்பது அவசியமில்லை. நாம் கூறும் விஷயத்தில் நமக்கு தெளிவிருந்தால் அதைப் பிறருக்கு கூறுவதும் அழைப்புப் பணிதான். இதை உணராத பலர், அழைப்புப் பணி ஆலிம்களின் கடமை என நினைக்கின்றனர். இது தவறாகும்.**

மனிதன் இயல்பிலேயே தவறு செய்யக்கூடியவனாகப் படைக்கப்பட்டுள்ளான். பெரும்பாவங்களிலிருந்து பாதுகாக்கப்பட்டவர்கள் நபிமார்கள் மட்டுமே! எனவே, தவறு செய்யும் இயல்புடைய மனிதனுக்கு நன்மையை ஏவுவதும் தீமையை குறித்து எச்சரிக்கை செய்வதும் அவசியமாகும்.

மக்கள் நன்மைகளை விட்டும் வெகு வேகமாக வெருண்டோடிக் கொண்டிருக்கின்றனர். தீமைகளில் கிடைக்கும் அற்ப சுகம், உலகாதாயம் என்பவற்றில் கவரப்பட்டு விளக்கை நோக்கிச் செல்லும் விட்டில்களாக தீமைகளை நோக்கி மக்கள் சென்று கொண்டிருக்கின்றனர்.

உதாரணமாக, வட்டி, ஹராம் என்பது இஸ்லாமிய பொருளாதாரக் கோட்பாட்டின் அடிப்படையாகும். இந்த வட்டியின் பக்கம் வாருங்கள் என தொலைக் காட்சி, வானொலி போன்ற தொலைத்தொடர்பு சாதனங்கள் அழைப்பு விடுக்கின்றன. பத்திரிகையில் பக்கம் பக்கமாக விளம்பரங்கள், இனிப்பான திட்டங்கள் என அன்றாடம் வெளிவந்து கொண்டிருக்கின்றது. இவ்வாறு தீமைகள் புயலாக வீசும்போது உண்மை இறைவிசுவாசி தானுண்டு தன் வேலையுண்டு என்று இருக்கமுடியுமா? அவர்களது உடன்பிறப்புகள், உற்றார் உறவினர்கள், ஊரார் அனைவரும் அழிவின்பக்கம் விரைந்து சென்று கொண்டிருக்கும் போது, இவர் கண்டு கொள்ளாமல் இருப்பது தகுமா?

இதனை பின்வரும் சம்பவங்கள் நமக்கு உணர்த்துகின்றன. ‘சுலைமான் (அலை) அவர்கள் தன் பட்டாளத்துடன் போகும் போது, ஒரு எறும்பு தனது மற்ற எறும்பு கூட்டங்களைப் பார்த்து, ”எறும்புகளே! நீங்கள் உங்கள் புற்றுகளுக்குள் நுழைந்து கொள்ளுங்கள். ஸுலைமானும் அவருடைய படையினரும் தாம் அறியாமலேயே உங்களை திண்ணமாக மிதித்து விட வேண்டாம். (27:18) எனக் கூறியது.

இந்த சம்பவம் மூலம் ஓர் எறும்பு தனது மற்றைய எறும்புகள் அழிந்துவிடக்கூடாது என்பதில் காட்டியிருக்கும் அக்கறையை உணரமுடிகிறது. ஓர் எறும்பே சமூக உணர்வுடன் நடந்திருக்கும்போது, எமது சகோதர சகோதரிகள் இணை வைத்தலிலும் பெரும்பாவங்களிலும் ஹராமிலும் மூழ்கியிருக்கும் போது, நாம் தடுக்காது இருக்கலாமா? அப்படியிருந்தால் இந்த எறும்பைவிட கீழான நிலைக்கல்லவா சென்றிடுவோம்.!

இதே அத்தியாயம் மற்றுமொரு நிகழ்ச்சியைக் கூறுகின்றது. சுலைமான் (அலை) அவர்கள் தனது படையை பார்வையிட்டுக் கொண்டு வருகிறார்கள். அங்கே ஹுத் ஹுத் என்ற பறவையைக் காணவில்லை. அது தாமதித்து வந்தது. இந்தப் பறவை தாமதித்து வந்ததற்கான காரணத்தை கூறாவிட்டால், அதை அறுத்து விடுவேன் அல்லது கடுமையாக தண்டிப்பேன் என்று கோபத்தோடு கூறுகிறார்கள். அப்போது அந்தப்பறவை சுலைமான் நபியிடம் பின்வருமாறு கூறியது.

அதற்குள் (ஹுது ஹுது வந்து) கூறிற்று, ”தாங்கள் அறியாத ஒரு விஷயத்தை நான் அறிந்து கொண்டேன். ‘ஸபா’விலிருந்து உம்மிடம் உறுதியான செய்தியைக் கொண்டு வந்திருக்கிறேன்.” ”நிச்சயமாக அ(த் தேசத்த)வர்களை ஒரு பெண் ஆட்சி புரிவதை நான் கண்டேன்; இன்னும், அவளுக்கு (தேவையான) ஒவ்வொரு பொருளும் கொடுக்கப்பட்டுள்ளது; மகத்தான ஓர் அரியாசனமும் அவளுக்கு இருக்கிறது. “அவளும், அவளுடைய சமூகத்தார்களும் அல்லாஹ்வையன்றி, சூரியனுக்கு ஸுஜூது செய்வதை நான் கண்டேன்; அவர்களுடைய (இத்தவறான) செயல்களை அவர்களுக்கு ஷைத்தான் அழகாகக் காண்பித்து, அவர்களை நேரான வழியிலிருந்து தடுத்துள்ளான். ஆகவே அவர்கள் நேர்வழி பெறவில்லை.” வானங்களிலும், பூமியிலும், மறைந்திருப்பவற்றை வெளியாக்குகிறவனும்; இன்னும் நீங்கள் மறைப்பதையும், நீங்கள் வெளியாக்குவதையும் அறிபவனுமாகிய அல்லாஹ்வுக்கு அவர்கள் ஸுஜூது செய்து வணங்க வேண்டாமா? “அல்லாஹ் – அவனையன்றி வணக்கத்திற்குரிய நாயன் (வேறு) இல்லை. (அவன்) மகத்தான அர்ஷுக்கு உரிய இறைவன்” (என்று ஹுது ஹுது கூறிற்று). *(27:20–26)*

இந்தச் செய்தியை கேட்டபின், சுலைமான் (அலை) அவர்கள் அந்தப் பெண்ணுக்கு அழைப்புப் பணி செய்து, அவள் இஸ்லாத்தில் இணைந்ததாக அல்குர்ஆன் கூறுகின்றது.

“இறைவனே! நிச்சயமாக, எனக்கு நானே அநியாயம் செய்து கொண்டேன்; அகிலங்களுக்கெல்லாம் இறைவனான அல்லாஹ்வுக்கு, ஸுலைமானுடன் நானும் முற்றிலும் வழிபட்டு) முஸ்லிமாகிறேன்” எனக் கூறினாள். (27:44)

நாம் சத்தியத்தை எடுத்துரைக்கும் போதுதான் ஏனைய சமூகங்களைவிட நாம் சிறப்புப் பெற்றிருக்கின்றோம். இதனை அல்குர்ஆன் தெளிவாக கூறுகின்றது.

மனிதர்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட (சமுதாயத்தில்) சிறந்த சமுதாயமாக நீங்கள் இருக்கிறீர்கள்; (ஏனெனில்) நீங்கள் நல்லதைச் செய்ய ஏவுகிறீர்கள்; தீயதை விட்டும் விலக்குகிறீர்கள்; இன்னும் அல்லாஹ்வின்மேல் (திடமாக) நம்பிக்கை கொள்கிறீர்கள்; வேதத்தையுடையோரும் (உங்களைப் போன்றே) நம்பிக்கை கொண்டிருப்பின், (அது) அவர்களுக்கு நன்மையாகும் அவர்களில் (சிலர்) நம்பிக்கை கொண்டோராகவும் இருக்கின்றனர்; எனினும் அவர்களில் பலர் (இறை கட்டளையை மீறும்) பாவிகளாகவே இருக்கின்றனர். (3:110)

### அழைப்புப் பணி எப்படி செய்வது

தான் அறிந்த மார்க்கச் செய்தியை, பிறருக்கு எடுத்து கூறுவதே, அழைப்பு பணியாகும். இதற்காக முழுமையாக இஸ்லாத்தை அறிந்திருக்க வேண்டுமென்பது அவசியமில்லை. நாம் கூறும் விஷயத்தில் நமக்கு தெளிவிருந்தால் அதைப் பிறருக்கு கூறுவதும் அழைப்புப் பணிதான். இதை உணராத பலர், அழைப்புப் பணி ஆலிம்களின் கடமை என நினைக்கின்றனர். இது தவறாகும். நாம் நமது நண்பர்களைச் சந்திக்கும் போதும் அவர்களை நமது வீட்டிற்கு விருந்துக்கு அழைக்கும் போதும் உரையாடல் மூலமாக தஃவாவை முன்னெடுத்துச் செல்லலாம். பேச்சோடு பேச்சாக சந்தர்ப்பத்திற்கு ஏற்ப நல்ல கருத்துகளை முன் வைக்கலாம். இப்படி அவர்களிடம் காணப்படும் தவறுகளை கலைய முற்பட வேண்டும்.

இதற்கு யூசுப் (அலை) அவர்களின் வாழ்வில் நடந்த ஒரு நிகழ்ச்சியை உதாரணமாக கூறலாம். நபி யூசுப் (அலை) அவர்கள் சிறையில் நீண்ட காலமாக இருந்தார்கள். அவர்களுடன் இன்னும் இருவர் அச்சிறையில் இருந்தனர். அவர்கள் இருவரும் தாம் கண்ட கனவின் விளக்கத்தைக் கேட்பதற்கு யூசுப் (அலை) அவர்களிடம் வந்தபோது, கனவிற்கு விளக்கம் கூறுவதற்கு முன்னரே, பல தெய்வங்களை வழிபடுவது சிறந்ததா? அல்லது அனைத்தையும் அடக்கியாள்பவன் சிறந்தவனா? என்று கேட்டார்கள். இதன் மூலம் இருவரளது சிந்தனையிலும் ஏகத்துவத்தின் சிறப்பை பதியச் செய்தார்கள். இதனை தொடர்ந்து அல்லாஹ்வை விட்டுவிட்டு நீங்கள் வணங்குபவைகள் அனைத்தும் போலியானவை, அல்லாஹ் ஒருவனையே வணங்க வேண்டும். அதுதான் சரியான மார்க்கம் என்ற கருத்தை முன்வைத்தார்கள்.

இங்கே சிறைச்சாலையில் தன்னுடன் இருந்தவர்களிடமே யூசுப் (அலை) அவர்கள் பேச்சோடு பேச்சாக தஃவாவை முன்வைத்திருப்பதைக் காணலாம். இத்தகைய வாய்ப்புகள் அன்றாடம் அனைவருக்கும் ஏற்படலாம். தருணம் பார்த்திருந்து தக்க நேரத்தில் கருத்துகளை முன்வைப்பதில் நாம் முனைப்போடு செயல்பட வேண்டும்.

அழைப்புப்பணி அறிவோடு ஆற்ற வேண்டிய பணியாகும். அன்பான, கனிவான பேச்சு, எதிர் கருத்துள்ளவர்களையும் மதிக்கும் மனோபாவம், இரக்க குணம், ஈகை, கருணை, பொறுமை, பணிவு போன்ற உயரிய பண்புகள் மூலம் நபி(ஸல்) அவர்களின் அழைப்புப்பணி பொலிவு பெற்றது..

அழைப்பாளருக்கு இருக்கவேண்டிய பண்புகள் என்னென்ன?

இன் ஷா அல்லாஹ். தொடரும்...

**ONLINE FREE UNANI HERBAL CONSULTATION**

044-2848 1344 * Email: drsyedmmameen@gmail.com

for * Sinusitis * Joints Pain * Infertility
* Nervous Debility * Obesity * Beauty & Hair Care

in public interest by **Dr. Hakim Syed M.M.Ameen**
S.k's Herbal Medical Hospital & Research Centre
36, J.J.K. Road, Royapettah, Chennai - 600 014. India.



# ரமளானே வருக!

இன்பங்கள் பூத்துக்குலுங்கும் ரமளான் மாதத்தை அடைந்திருக்கிறோம். இம்மாதத்தில் செய்யும் எல்லா நன்மையான காரியங்களும் மற்ற எல்லா மாதங்களில் செய்யும் நன்மையான காரியங்களை விட பன்மடங்கு நன்மைகள் அதிகமானது. இறை அச்சத்தை இனிதாகப் பெற்றுக்கொள்ள, இறைவனை எளிமையாக நெருங்கிக் கொள்ள, தொழுகையில் சுவை காண, பசியிலும் தாகத்திலும் ஓர் இனம் தெரியாத மகிழ்வடைய, குடும்பத்தோடு குதூகலமாக இசைந்து வாழ, உலக அலுவல்களை ஓரம் ஒதுக்கி விட்டு, பள்ளிவாசல்களோடு உள்ளங்களை தொங்க விட, நன்மைகளை மூட்டை மூட்டையாகக் கொள்ளையடிக்க ஏற்ற மாதம், இந்த ரமளான் மாதம். இந்த மாதத்தை அடைந்திருக்கிற நாம் இம்மாதத்தின் சிறப்புகளையும், கடைபிடிக்க வேண்டிய சில ஒழுக்கங்களையும் அறிய வேண்டியது இன்றியமையாதது.

**ரமளான் மாதத்தின் சிறப்புகள்...**

*1) ரமளான் மாதம் வந்துவிட்டால் சுவனத்தின் கதவுகள் திறக்கப்படும். நரகத்தின் கதவுகள் மூடப்படும், ஷைத்தான்களுக்கு விலங்கிடப்படும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல்: புகாரி)*

*2) ரமளான் மாதத்தின் முதல் இரவிலேயே ஷைத்தான்களுக்கும் கெட்ட ஜின்களுக்கும் விலங்கிடப்படும். நரகத்தின் கதவுகள் மூடப்படும். அதில் ஒரு கதவும் திறந்திருக்காது. சுவர்க்கத்தின் கதவுகள் திறக்கப்படும், அதில் ஒரு கதவும் மூடப்பட்டிருக்காது. இன்னும், ஒரு இறைஅழைப்பாளர் ”நன்மை செய்பவர்களே! முன் வாருங்கள், பாவம் செய்பவர்களே! நிறுத்திக் கொள்ளுங்கள்!” என்று உரக்கச் சொல்வார் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல்: திர்மிதி, இப்னுமாஜா)*

*3) அல்லாஹ்வை ஈமான் கொண்டவராகவும், நன்மையை எதிர்பார்த்தவராகவும் ரமளான் மாதத்தில் யார் நோன்பு நோற்கின்றாரோ, அவரின் முன் சென்ற பாவங்கள் மன்னிக்கப்படும். லைலத்துல் கத்ர் இரவில் அல்லாஹ்வை ஈமான் கொண்டவராகவும் நன்மையை எதிர்பார்த்தவராகவும் யார் நின்று வணங்குகின்றாரோ, அவரின் முன் பாவங்கள் மன்னிக்கப்படும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல்: புகாரி)*

*4) நோன்பு மாதத்தில் உம்ரா செய்வது ஹஜ் செய்வதற்கு சமமாகும். ஆகவே, நோன்பில் உம்ரா செய்து கொள் என ஒரு அன்சாரிப் பெண்ணுக்கு நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல்: நஸாயி)*

ஒவ்வொரு வருடத்திலும் அல்லாஹ் பல விஷேச தினங்களை ஏற்படுத்தி அவற்றில் செய்யும் நல் அமல்களுக்கு பன் மடங்கு நன்மைகளைத் தருகின்றான். அப்படிப்பட்ட நாள்களைக் கொண்டதுதான் ரமளான் மாதமும். இதில் செய்யும் நன்மைகளுக்கு அதிக கூலிகள் கொடுக்கப்படுகின்றன. மற்ற மாதங்களில் செய்யும் அமல்களை விட இம்மாதத்தில் நபி (ஸல்) அவர்கள் அதிகமான வணக்கங்களைச் செய்வார்கள். இம்மாதத்தில் ஓர் இரவு இருக்கின்றது, அது ஆயிரம் மாதங்களை விட சிறந்தது. இம்மாதத்தில் அல்லாஹ்வின் அருள் அதிகம் இறங்குகின்றது, இம்மாதத்தில் ஷைத்தான்களுக்கு விலங்கிடப்படுகின்றது. நரகத்திலிருந்து விடுதலை கிடைக்கின்றது, இம்மாதத்தில் அல்லாஹ் பாவங்களை அதிகம் மன்னிக்கின்றான். “யார் ரமளான் மாதத்தை அடைந்தும் பாவம் மன்னிக்கப்படாமல் மரணித்தானோ அவனை அல்லாஹ் (தன் அருளை விட்டும்) தூரமாக்குவானாக!” என ஜிப்ரயீல் (அலை) அவர்கள் பிரார்த்தனை செய்ய, நபி (ஸல்) அவர்கள் அதற்கு ஆமீன் கூறினார்கள். இன்னும் யார் இம்மாதத்தின் நன்மையை இழந்தானோ அவன் எல்லா நன்மைகளையும் இழந்தவனாவான் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். இவ்வளவு சிறப்புகளை உள்ளடக்கியதுதான் இம்மாதம். ஆகவே, யாரெல்லாம் இம்மாதத்தை அடைந்தீர்களோ, இதை ஒரு பெரும் பாக்கியமாகக் கருதி நன்மைகளை அதிகமதிகம் செய்யுங்கள்! இன்னும் செய்த தவறுகளுக்காக பாவமன்னிப்பும் தேடுங்கள், அல்லாஹ் நம் அனைவரையும் அவனின் அருளையும் பாவமன்னிப்பையும், நரக விடுதலையையும் பெற்றவர்களாக ஆக்கியருள்வானாக!

**ரமளான் மாதத்தில் கடைபிடிக்க வேண்டிய ஒழுக்கங்களும்! பேணுதல்களும்!**

*1) ‘நோன்பு நரகத்திலிருந்து பாதுகாக்கும் கேடயமாகும்’ ஆகவே, நோன்பு நோற்றிருக்கும் நேரத்தில் உடலுறவு கொள்ளக் கூடாது. இன்னும் இஸ்லாத்திற்கு மாற்றமான செயல்களையும் செய்யக் கூடாது. யாராவது சண்டையிட்டால் அல்லது ஏசினால் ‘நிச்சயமாக நான் நோன்பாளி, நான் நோன்பாளி’ என்று கூறிக்கொள்ளட்டும். என் உயிர் எவனிடம் இருக்கிறதோ அந்த இறைவன் மீது ஆணையாக, நோன்பாளியின் வாயிலிருந்து வெளியாகும் வாடை, அல்லாஹ்விடத்தில் கஸ்தூரியை விட மிகவும் நறுமணமுள்ளதாகும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல்: புகாரி)*

*2) நோன்பு நோற்றவன் தன் உணவையும், குடிபானத்தையும், இச்சையையும் எனக்காகவே விட்டுவிடுகின்றான். நோன்பு எனக்குரியது. அதற்கு நானே கூலி கொடுக்கின்றேன். ஒரு நன்மைக்கு பத்து மடங்கு நன்மைகளை வழங்குவேன் என்று அல்லாஹ் கூறியதாக நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: புகாரி)*

*3) சுவர்க்க வாசல்களில் ஒன்றுக்கு ‘அர்ரய்யான்’ என்று சொல்லப்படும். மறுமை நாளில் அவ்வாசலில் நோன்பாளிகளைத் தவிர வேறு யாரும் நுழைய மாட்டார்கள். ‘நோன்பாளிகள் எங்கே’ என்று அழைக்கப்படும். அப்போது நோன்பாளிகள் எழுந்து அவ்வாசல் வழியாக நுழைவார்கள். அவர்கள் நுழைந்ததும் அவ்வாசல் மூடப்படும். அவர்களைத் தவிர வேறு யாரும் அவ்வாசலால் நுழையமாட்டார்கள் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல்: புகாரி)*

*4) நோன்பைத் தவிர ஆதமுடைய மகன் செய்யும் எல்லா அமல்களுக்கும் பத்திலிருந்து எழுநூறு மடங்காக (கூலி) கொடுக்கப்படுகின்றது. அது (நோன்பு) எனக்குரியது. அதற்கு நானே கூலி கொடுக்கின்றேன். (காரணம்) அவனுடைய இச்சையையும், உணவையும் எனக்காக விட்டுவிடுகின்றான். நோன்பு திறக்கும்போதும், இன்னும் அவனுடைய இறைவனை சந்திக்கும் போதும் (என) இரு மகிழ்ச்சிகள் நோன்பாளிக்கு இருக்கின்றன. நிச்சயமாக நோன்பாளியின் வாயிலிருந்து வரும் வாடை அல்லாஹ்விடத்தில் கஸ்தூரியை விட மிகவும் நறுமணமுள்ளதாயிருக்கும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல்: முஸ்லிம்)*

வணக்கங்களை அல்லாஹ் நம்மீது கடமையாக்கியது நாம் அல்லாஹ்விற்கு, கட்டுப்படுகின்றோமா இல்லையா? என்பதை சோதனை செய்வதற்குத்தான். வணக்கங்களை நாம் செய்வதினாலோ, அல்லது விடுவதினாலோ அல்லாஹ்விற்கு எந்த இலாபமோ, நஷ்டமோ கிடையாது. இன்னும் அல்லாஹ் ஒவ்வொரு வணக்கத்தை கடமையாக்குவதின் மூலமாக ”எப்படிப்பட்ட தியாகத்தையும் அல்லாஹ் விற்காக நாம் செய்யத் தயாராக இருக்கின்றோமா” என்பதைச் சோதிப்பதற்கும்தான். அப்படிச் செய்பவர்களுக்கு கூலியாக, மறுமையில் சுவர்க்கத்தை ஏற்பாடு செய்து வைத்திருக்கின்றான். இந்த வணக்கங்களின் வரிசையில் உள்ளதுதான் நோன்பு. நோன்பைப் பொறுத்தவரை, மற்ற வணக்கங்களிலிருந்து எதிர்பார்க்கப்படும் தியாகங்களுக்கு முற்றிலும் மாறுபடுகின்றது. நோன்பு என்பது, பசி, தாகம், இச்சை இவைகளை இறைவனிடத்திலுள்ள நன்மையை எதிர்பார்த்தவராக நோன்பு மாதத்தின் பகல் நேரத்தில் கட்டுப்படுத்திக் கொள்வதாகும், இவைகளை வெறும் சடங்குக்காகச் செய்யக்கூடாது. வணக்கம் என்ற தூய எண்ணத்தோடு செய்ய வேண்டும். நோன்பின் நோக்கமே இறையச்சத்தை ஏற்படுத்திக் கொள்வதுதான்.

தக்வா (இறையச்சம்) என்றால், அல்லாஹ்விற்கு பயந்து, அவன் ஏவியவைகளைச் செய்தும், தடை செய்தவைகளை முற்றாக தவிர்ந்து நடப்பதாகும். “தக்வாவின் உரிய தோற்றத்தை” நோன்பு நமக்கு கற்றுக் கொடுக்கின்றது. நோன்பாளி யாருக்கும் தெரியாத இடத்தில் தனிமையில் இருக்கும்போதும், பசியுள்ளவராக இருந்தும், தன்னிடமுள்ள உணவை உண்பதில்லை. தாகமுள்ளவராக இருந்தும் எதையும் குடிப்பதில்லை. இச்சை இருந்தும் அதை நிறைவேற்றுவதில்லை. இதற்கெல்லாம் காரணம் நான் தனிமையில் இருந்தாலும் இந்த நோன்பை கடமையாக்கிய அல்லாஹ் என்னைப் பார்த்துக் கொண்டிருக்கின்றான் என்ற எண்ணத்தினால்தான். இதுதான் ”இறையச்சத்தின் உண்மையான தோற்றமாகும்”. இத்தன்மை நோன்போடு முடிந்துவிடக்கூடாது. வாழ்க்கை முழுவதிலும் ஒவ்வொரு விநாடியும் இதே எண்ணத்தோடு ஒவ்வொரு முஸ்லிமும் வாழ வேண்டும். இந்த எண்ணத்தோடு வாழ்ந்தால்தான் தொழாதவர், நான் ஏன் தொழவில்லை? இத்தொழுகையைக் கடமையாக்கிய இறைவன் என்னைப் பார்த்துக் கொண்டிருக்கின்றான் என்று நினைத்து, தொழ ஆரம்பித்து விடுவார். பாவங்களில் ஈடுபடக்கூடியவர், அல்லாஹ் என்னைப் பார்த்துக் கொண்டிருக்கின்றான். அவன் என்னைத் தண்டிப்பான் என்று நினைத்து, அதை விட்டு விடுவார். இதனால்தான் அல்லாஹ் குர்ஆனின் பல இடங்களில், ஈமான் கொண்டவர்களே! அல்லாஹ்வைப் பயந்து கொள்ளுங்கள் என்று கூறுகின்றான். ஆகவே, அல்லாஹ்வும் அவனது தூதர் முஹம்மது (ஸல்) அவர்களும் ஏவியதில் முடியுமானவைகளைச் செய்தும், தடை செய்தவைகளை முற்றிலுமாக தவிர்ந்து நடப்பதற்கு உறுதியான முடிவெடுங்கள், அல்லாஹ் நம் அனைவருக்கும் வாய்ப்பளிப்பானாக..!

*யார் நோன்பை இந்த உயரிய நோக்கமின்றி வெறும் சடங்குக்காக நோற்கின்றாரோ, அதில் எந்த வித பயனும் இல்லை. ”யார் கெட்ட பேச்சுகளையும், கெட்ட செயல்களையும் விட்டு விடவில்லையோ அவர் உணவை விடுவதிலும், குடிப்பை விடுவதிலும் அல்லாஹ்விற்கு எந்தத் தேவையும் இல்லை என்பதாக நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.” (புகாரி)*

பசியோடும், தாகத்தோடும் இருப்பது மாத்திரம் நோன்பாகாது. இவைகளைக் கட்டுப்படுத்துவது போல், மற்ற எல்லாப் பாவங்களையும் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும். ரமளான் மாதம் இஸ்லாம் கூறக்கூடிய எல்லா நற்செயல்களையும் நினைவுபடுத்தக்கூடிய ஒரு மாதமாகும். தொழாதவர்கள் தொழ ஆரம்பித்து விடுகின்றனர். தர்மமே செய்யாதவர்கள் தர்மம் செய்கின்றனர். உம்ரா செய்யாதவர்கள் உம்ரா செய்கின்றனர். குர்ஆன் ஓதாதவர்கள் ஓத ஆரம்பித்துவிடுகின்றனர். தவறான செயல்களில் ஈடுபட்டவர்கள் அதை நிறுத்திக் கொள்கின்றனர். இன்னும் இது போன்ற பல நற்செயல்களையும், நோன்பு நமக்குக் கற்றுத் தருகின்றது. ஏன் இந்த நற்பண்புகளை நோன்பு அல்லாத மாதங்களிலும் தொடரக்கூடாது?

**நோன்பு மாதத்தில் எந்த இறைவனை அஞ்சி இந்த நற்செயல்களில் ஈடுபட்டோமோ, அதே போன்று மற்ற மாதங்களிலும் ஈடுபடவேண்டும். அல்லாஹ் நோன்பு அல்லாத மாதங்களில் நம்மை கண்காணிப்பதில்லையா? நோன்பு அல்லாத மாதங்களில் நாம் மரணிப்பதற்கு வாய்ப்பில்லையா? ஏன் நோன்பு மாதத்தோடு இந்த நல் அமல்களை நிறுத்திக் கொள்ள வேண்டும்? சிந்தியுங்கள்! நல் அமல்களை, தொடர்ந்து செய்வதற்கு, அல்லாஹ் நம் அனைவருக்கும் வாய்ப்பளிப்பானாக...!**

**– அப்துல்லாஹ்**

தலையங்கம்

# இனிய ரமளானிலிருந்து இனிதே ஆரம்பம்!

அல்லாஹ்வின் அருளால் ரமளான் மாதத்தை அடைந்திருக்கின்றோம். இந்த மாதம் நமது குடும்பத்தில் வளமும், நலமும், மனநிம்மதியும், இறையருளும் கிடைக்க வேண்டும் என்ற பிரார்த்தனையோடு...

தமிழ் முஸ்லிம் சமூகம் கல்வியில் பின்தங்கியும், அறிவின் வறட்சியிலும், இஸ்லாமிய ஆளுமைகளின் பற்றாக்குறையிலும் கடந்த நூற்றாண்டைக் கடந்து வந்திருக்கின்றது. இனிவரும் காலமும் இந்தச் சூழ்நிலை நிலவக் கூடாதென அறிஞர்களும், அழைப்பாளர்களும், சிந்தனையாளர்களும் தங்களின் பேச்சாலும், எழுத்தாலும், பல முனைகளில் செயல்பட்டு அயராது உழைத்து வருகிறார்கள். அதன் பலனாக பல்வேறு மாற்றங்களும் தமிழ் முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் நிகழ்ந்து வருகிறது. இருப்பினும், நம் சமூகம் கல்விப் போதாமையால் தவித்துக் கொண்டிருக்கின்றது. கல்வியின் தேடல் மீது இல்லாத நாட்டம், மார்க்கத்தை முழுதும் உள்வாங்காமை போன்றவை நம் சமூகத்தை சீர்குலைத்தும் வருகின்றது.

பிறப்பது, வாழ்வது, உண்பது, உடுத்துவது, உறைவிடத்தைத் தேடுவது, மடிவது ஆகியவைகளின் நோக்கம் அற்று வாழும் சாதாரண பிரக்ஞைகளாக நாம் வாழ்வது சாலப்பொருத்தமற்றது.

இஸ்லாம் என்னும் அழிக்க முடியா இமைய மரத்தின் கிளைகளில் உள்ள இலைகள் நாம். இலக்கு என்னும் வேரின் வீரியத்திற்கேற்ப வளரும் செழிப்பான இலைகளாக ஒவ்வொரு நம்பிக்கையாளனும் திகழ வேண்டும். அதற்கு நம்மை நாமே செதுக்கிக் கொள்வது கட்டாயம். ஆனால், எப்படி செதுக்குவது?

“வாசி” “யோசி” “விசுவாசி” என்பது மார்க்கத்தின் அடிப்படைத் தத்துவம். ஒரு நல்ல விசுவாசி யோசிப்பவனாக இருக்க வேண்டும். யோசிப்பவன் நிச்சயமாக வாசிப்பவனாக இருந்தே ஆக வேண்டும். இறைவன் புறத்திலிருந்து மனித சமூகத்திற்கு இறங்கிய முதல் வசனமும் வாசிப்பை(கல்வியை)க் குறித்தே இறங்கியது. “ஓதுவீராக!” (96.1)

இதனை அடிப்படை நோக்கமாகக் கொண்டு தொடங்கப்பட்டதே நம் “அழைப்பொலி” மாத இதழ். இலாப நோக்கங்கள் பாராமல் முஸ்லிம் சமூகத்தினரிடம் இஸ்லாமியக் கல்வியை இலவசமாகக் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும் என்ற உன்னத இலட்சியத்தோடு, முதல்மாத குழந்தையாக “என்னை வாசிக்க மாட்டீர்களா!” என்ற ஏக்கத்தோடும், தங்களின் பேராதவை எதிர் நோக்கியும் தங்கள் கரங்களில் தவழ்ந்து கொண்டிருக்கின்றது.

இஸ்லாம் குறித்த தவறான பிம்பத்தை அகற்ற, முஸ்லிம் அல்லாதவர்களுக்கு இறை மார்க்கத்தின் செய்திகளை ஒலிக்கச் செய்ய, இஸ்லாம் என்ற சத்திய மார்க்கத்தை, எழுத்தெனும் ஆயுதத்தைக் கொண்டு, அறிவெனும் கரடுமுரடான கல்லை, அழகிய கட்டிடம் கட்டுவதற்கு ஏற்றார்போல் மாற்றுவதற்காகக் கிளம்பியருக்கின்ற, சில இஸ்லாமிய அச்சு ஊடகங்களின் பட்டியலில் ஓர் இடத்தைப் பிடிக்க வேண்டும் என்ற நன்னோக்கத்தோடு நயம்படத் தொடங்கியிருக்கின்றோம்.

இதழில் இடம்பெறும் அனைத்துச் செய்திகளும் மார்க்க விழுமியங்களோடே அமைந்திருக்கும். மார்க்கக் கல்வியாளர்களின் மேற்பார்வைக்குப் பிறகே இதழ் தங்களிடம் வந்தடையும். படைத்தவனின் பொருத்தத்தை மட்டுமே நாடித் தொடங்கியிருக்கும் இப்பணியை அல்லாஹ் ஏற்றுக் கொள்வானாக...!

இன் ஷா அல்லாஹ்.! பிரதிமாதம் அழைப்பொலியின் “ஒளி” உங்களை வாசிக்க அழைக்கும். இந்த “ஒலி” தொடர்ந்து தடைபடாமல் ஒலித்துக் கொண்டேயிருக்க வாசகர்களின் பிரார்த்தனையையும் ஆதரவையும் வேண்டி நிற்கிறது.

இனிதே ஆரம்பம் இனிய ரமளானிலிருந்து!

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே...

**– ஆசிரியர்**

வேதவரிகள்

## நன்மையை ஏவுங்கள்! தீமையை தடுங்கள்!

மனிதர்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட (சமுதாயத்தில்) சிறந்த சமுதாயமாக நீங்கள் இருக்கிறீர்கள். (ஏனெனில்) நீங்கள் நல்லதைச் செய்ய ஏவுகிறீர்கள். தீயதைவிட்டும் விலக்குகிறீர்கள். இன்னும் அல்லாஹ்வின்மேல் (திடமாக) நம்பிக்கை கொள்கிறீர்கள். (ஆல இம்ரான் 110)

அல்லாஹ் இவ்வசனத்தில் நன்மையை ஏவி, தீமையைத் தடுக்கும் பணியை மிக முக்கியப்படுத்திச் சொல்லியிருக்கிறான். இப்படிச் சொல்லியிருப்பதில், இந்தப் பணியின் அவசியமும், இதில் அடங்கியுள்ள பலன்களும் சீர்திருத்தங்களும் நன்கு தெரிகின்றன.

உலகின் பெரும்பாலான தேசங்களில் இன்று பாவங்கள் பெருகிக் கொண்டே இருக்கின்றன. இணைவைத்தலும், பெரும் பாவங்களும் பரவிக் கிடக்கின்றன. இந்த நேரத்தில் முஸ்லிம்கள் நன்மையின் பக்கம் மக்களை அழைத்து, தீமையை விட்டுத் தடுப்பது மிக அவசியமானது. அவசரமான தேவையும் கூட.

இன்றோ அதிகமானவர்கள் இக்கடமையின் சிறப்பை மறந்துவிட்டார்கள். இஸ்லாமியக் கல்விக்கு பஞ்சம் வந்துவிட்டது. அறியாமை அதிகரித்துவிட்டது. நபியும், நபித்தோழர்களும், முன்னோர்களும், நல்லோர்களும் வாழ்ந்த காலத்தைப் போல் இக்கடமையைச் செய்வதின் அவசியம் அதிகரித்துவிட்டது.

அல்லாஹ் நமக்குக் கடமையாக்கியுள்ள பணிகளில் மிக மகத்தான பணி, நன்மையை ஏவி தீமையைத் தடுக்கும் பணி. நம் சமுதாயத்தின் எழுச்சியும் வெற்றியும் இந்தப் பணியைச் சிறப்பாக நடைமுறைப்படுத்துவதில் இருக்கிறது.

இதைக் கண்டுகொள்ளாமல் தொடர்ந்து அலட்சியம் செய்து வந்தால் மிகப் பெரிய ஆபத்தும் குழப்பமும் உண்டாகிவிடும். நன்மையான விஷயங்கள் மறைந்துவிடும். தீமைகள் அதிகரித்துவிடும்.

ஆகவே, அவரவர் தனது சக்திக்குட்பட்டு நன்மையை ஏவ வேண்டும். தீமையை தடுக்க வேண்டும்.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். உங்களில் யாராவது ஒரு தவறைக் கண்டால் அதைத் தமது கரத்தால் மாற்றட்டும். அது இயலாவிட்டால் தமது நாவால் மாற்றட்டும். அதுவும் இயலாவிட்டால் உள்ளத்தால் (வெறுத்து விலகி விடட்டும்) இது ஈமானின் குறைந்தபட்ச அளவாகும்.

நூல்: முஸ்லிம் 78

தூதர் மொழிகள்

## இணைவைத்து வாழ்ந்திட வேண்டாம்!

முஆத் இப்னு ஜபல் (ரலி) அறிவிக்கின்றார்கள்:

நான் நபி(ஸல்) அவர்கள் பின்னே ஒரு கழுதையில் உட்கார்ந்திருந்தேன். அப்போது “முஆதே! அடியார்கள் மீதுள்ள அல்லாஹ்வின் கடமை, அல்லாஹ்வின் மீதுள்ள அடியார்களின் கடமை பற்றி நீர் அறிவீரா?” என்று கேட்டார்கள். “அல்லாஹ்வும் அவனது தூதரும் மிக அறிந்தவர்கள்.” என்றேன். “நிச்சயமான அடியார்கள் மீதுள்ள அல்லாஹ்வின் கடமை என்பது அவனை அவர்கள் வணங்க வேண்டும். அவனுக்கு எதையும் இணைவைக்காமல் இருக்கவேண்டும். அல்லாஹ்வின் மீதுள்ள அடியார்களின் கடமை என்பது தனக்கு எதையும் இணை வைக்காத அடியானை தண்டிக்காமல் இருப்பதாகும்” என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். உடனே நான் “இறைத்தூதர் அவர்களே! மக்களுக்கு இந்த நற்செய்தியை நான் கூறட்டுமா?” என்றேன். அவர்களுக்கு இந்த நற்செய்தியைக் கூறவேண்டாம். இதை நம்பியே இருந்துவிடுவார்கள். (வேறொரு நற்செயல் புரியமாட்டார்கள்) என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

நூல்கள்: முஸ்லிம்44, திர்மிதீ 2567, அபூதாவூத் 2196, இப்னுமாஜா4286, அஹ்மத் 20987.

*மனிதன் தனக்குரிய உரிமைகளை நிலைநாட்டுவதில், அது புறக்கணிக்கப்படும்போது கேட்டுப் பெறுவதில், அதற்காக போராடுவதில், பெரும் முனைப்பைக் காட்டுகிறான். மனிதர்களிடையே உள்ள உரிமைகளைப் பேணுவதில்தான் இந்த முனைப்பு.

ஆனால் நம்மைப் படைத்த இறைவனுக்கு உரிமையை கடமையை நாம் செய்ய வேண்டியுள்ளது என்பதை ஏனோ மறந்துவிடுகிறோம். அல்லாஹ்வுக்குரிய கடமை என்ன? மனிதன் அவனுக்கு இணை வைக்காமல் வாழ வேண்டும் என்பதுதான்.

இன்று உலகில் கண்டதையும் கடவுளாக்கி, தன்னைப் படைத்த அந்த ஏக இறைவனுக்கே இணை வைத்துவிட்டான். கைக்குள் அடங்கும் பொருட்களும், கட்டுப்படும் மிருகங்களும் கூட கடவுள் என்ற பெயரால் பூஜிக்கப்படுகின்றன.

இந்த பல கடவுள் கொள்கையின்றி அல்லாஹ்வை மட்டுமே கடவுள் என ஏற்று அவனுக்கு எதையும் இணை வைக்காமல் வாழும் நபரை நாளை மறுமையில் தண்டிக்காமல் இருப்பது மனிதனுக்கு அல்லாஹ் செய்யும் கடமையாகும்.

இறைத் தண்டனையை பெறும் வகையில் “இணை வைத்து வாழ்ந்திட வேண்டாம்” என்றே இங்கு நபி(ஸல்) அவர்கள் போதனை செய்துள்ளார்கள்.


**கௌரவ ஆலோசகர்கள் & இதழ் மேற்பார்வை**

மௌலவி M. பஷீர் ஃபிர்தவ்ஸி | மௌலவி முஹம்மது இஸ்மாயீல் காஷிஃபி

அபூமொஹ்சின் | P. அப்துர் ரஹ்மான் | நண்பன் அபூபக்கர்

**இதழ் வடிவமைப்பு:** “1st Step” இம்ரான்

**ஆசிரியர்:** மக்தூம் தாஜ்

**உங்கள் விமர்சனங்கள் மற்றும் கருத்துகள் இதழில் இடம்பெற...**


**கட்டுரைகளை அனுப்ப** : azhaippoli2017@gmail.com

**விளம்பரத் தொடர்புக்கு** : 9884928787







## கோபப்படாதே!

இன்றைய பரபரப்பான வாழ்க்கையில் எல்லோருமே ஏதோ ஒரு வகையான வேகத்தில் இருக்கின்றோம். அதன் விளைவாக ஏதோ ஒரு டென்ஷனில் இருக்கின்றோம் சில சமயங்களில் அந்த டென்ஷன் கோபமாக மாறிவிடுகிறது. சில சமயங்களில் அந்தக் கோபம் வெறியாகி நெறிமுறை தவறி நடந்து கொள்கிறோம். எல்லாம் நடந்து முடிந்த பிறகு அடடா கொஞ்சம் ஓவராக கோபப்பட்டு விட்டேனே! என்று கையைப் பிசைவதில் எந்த நன்மையும் இருக்காது.

ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து தனக்கு உபதேசம் செய்யுமாறு கேட்டுக் கொண்டார். அவருக்கு நபி (ஸல்) அவர்கள் "கோபப்படாதே" என்று உபதேசம் செய்தார்கள். அவர் மூன்றாவது முறையாக உபதேசம் செய்யுங்கள் எனக் கேட்ட போதும் "கோபப்படாதே" என்றே உபதேசம் செய்தார்கள்.

இந்த ஹதீஸின் மூலமாக கோபம் என்பது ஒரு மோசமான குணம் என்று தெளிவாகத் தெரிகின்றது. அப்படியானால் கோபம் என்பது கூடவே கூடாதா? என்ற கேள்வி எழலாம். ஆம்! கோபம் வர வேண்டும். அது தவறல்ல. மாறாக அநாவசியமான இடங்களில் வரம்புமீறி வரக்கூடாது.

கோபம் வந்தால் நாம் திட்டுவோம், சபிப்போம், தீய வார்த்தைகளைக் கூறுவோம். ஆனால் நபியவர்கள் அவ்வாறு நடக்க மாட்டார்கள். மாறாக அளவான கோபத்தில் அழகான முறையில் கண்டிப்பார்கள்.

"அவருக்கு என்ன ஆனது? அவர் நெற்றியில் மண் படியட்டும்." என்றுதான் கூறுவார்கள். அதாவது கோபத்தில் கண்டிப்பதுகூட துஆவாகவே இருக்கும். நெற்றியில் மண் படியட்டும் என்றால் அதிகமாக ஸஜ்தா செய்யட்டும் என்பது பொருளாகும்.

அவசியமான இடங்களில் அளவான கோபம் கூடும் என்றாலும் அதையும் அடக்கிக் கொள்வது மிக நல்லதாகும். அதுதான் நல்லோர்களின் பழக்கமாகும். "அவர்கள் கோபத்தை அடக்கிக் கொள்வார்கள்" என அல்லாஹ் விரும்பும் நல்லோர்களின் தன்மையைப் பற்றிக் குர்ஆன் கூறுகிறது.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: "யார் கோபத்தை அடக்கிக் கொள்கிறாரோ அவரை விட்டும் அல்லாஹ் தனது தண்டனையை மறுமை நாளில் விலகிக் கொள்கிறான்."

கோபப்படாத இடத்தில் கோபப்படுவது கெட்ட தன்மை என்றால், கோபத்தை வெளிப்படுத்த வாய்ப்பு இருக்கும் போது அதை அடக்கிக் கொள்வது நல்ல தன்மை ஆகும்.

ஒருமுறை நபி (ஸல்) அவர்கள் அனஸ் (ரலி) அவர்களை ஒரு வேலைக்காக அனுப்பினார்கள். ஆனால் அவர் சொன்ன வேலையைச் செய்யாமல், சென்ற வழியில் சிறுவர்கள் விளையாடுவதைக் கண்டு அங்கேயே நின்றுவிட்டார். யதார்த்தமாக அவ்வழியே வந்த நபியவர்கள் அங்கே அனஸ் (ரலி) நிற்பதைக் கண்டு அவரை அழைத்து புன்னகையோடு "என்ன அனஸ்! நான் சொன்ன வேலையைச் செய்யவில்லையா?" என்று கேட்டார்கள். "இதோ செய்கிறேன்" என்று சொல்லிவிட்டு அங்கிருந்து சென்று வேலையை அனஸ் (ரலி) முடித்தார்.

இந்த இடத்தில் நபியவர்களுக்குக் கோபம் வரவேண்டும். ஆனால் அருள் நிரம்பிய வதனத்தில் புன்னகை தவழ்ந்தது. இதுதான் பண்பட்ட, பக்குவமான குணம், இந்தக் குணம் நம்மிடம் இருந்தால், பரபரப்பும், மனக்குழப்பமும் இல்லாத பண்பான வாழ்க்கையை வாழ முடியும்.

**– ஜுனைதா**

## புத்தகங்களை மஹராகப் பெற்ற முன்மாதிரிப் பெண்மணி

மஹர்..! இஸ்லாம் பெண்களுக்கு வழங்கிய அழகிய கொடை. பெண்களின் விடுதலை மார்க்கமான இஸ்லாம் பெண்களுக்கு அனைத்து உரிமைகளையும் வழங்கியுள்ளது. சொத்துரிமை, எழுத்துரிமை, பேச்சுரிமை, கல்வி கற்கும் உரிமை, கற்பிக்கும் உரிமை, சம்பாதிக்க, செலவழிக்க, விரும்பிய கணவரைத் தேர்ந்தெடுக்க, விரும்பாத கணவரை விவாகரத்து செய்ய, மறுமணம் புரிய என அனைத்து உரிமைகளையும் வழங்கியுள்ளது. பெண்களை சமூகத்தின் மிக முக்கிய அங்கமாகப் பார்க்கிறது இஸ்லாம்.

திருமணத்தின் போது கணவராகத் தாம் ஏற்றுக்கொள்பவரிடமிருந்து மணக்கொடை பெறுவதை இஸ்லாம் வலியுறுத்துகிறது. இந்த மஹர் இல்லாத திருமணம் செல்லாது என அறிவிக்கிறது. இந்த மஹர் தொகையை நிர்ணயிக்கும் உரிமையையும் இஸ்லாம் பெண்ணிற்கே வழங்கியிருக்கிறது.

மணமகளுக்கு மஹர் கொடுக்க வேண்டிய மணமகன் மணமகளிடமிருந்து வரதட்சிணை எனும் மடிப்பிச்சை ஏந்தும் அவலம் நிலவிக் கொண்டிருக்கின்ற இன்றைய சூழலில் கேரள மாநிலம் மலப்புரம் மாவட்டத்தைச் சார்ந்த ஸஹ்ல் என்ற மணமகள் தனக்கு கணவராக வரப் போகும் அனீஸிடம் "மஹராக தங்கம், நகை, நட்டெல்லாம் வேண்டாம். இதோ இந்த ஐம்பது புத்தகங்களை வாங்கி வாருங்கள்" என்ற ஒரு பட்டியலைத் தந்தார். அரசியல், இலக்கியம், பொருளாதாரம், இஸ்லாம் என பல தலைப்புகளில் விரவிக்கிடந்த புத்தகப் பட்டியலுடன் அனீஸ் சென்னை, பெங்களூர் என கடைகடையாய் ஏறி இறங்கி புத்தகங்களை வாங்கிச் சேர்த்தார்.

புத்தகங்கள் தயாரானதும், புத்தகங்களையே மணக் கொடையாகப் பெற்றுக் கொண்டு அனீஸை வாழ்க்கைத் துணையாக்கிக் கொண்டார் ஸஹ்லா. உறவினர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தபோதும் அவர்களைச் சமாதானப்படுத்தி மிக எளிமையான முறையில் திருமணம் நடந்துள்ளது.

அழகிய புத்தகங்களை மணக்கொடையாகப் பெற்ற ஸஹ்ல் நம் காலத்தின் முன்மாதிரிப் பெண்மணி. இந்த முன்மாதிரியைப் பின்பற்றும் ஸஹ்ல்கள் பெருகட்டும். அனீஸ்களும் காத்திருக்கின்றார்கள். ஓர் அறிவுப்பூர்வமான தலைமுறை வீறுகொண்டு எழக் காத்திருக்கிறது.

வாழ்த்துகள் ஸஹ்ல் அனீஸ்...!

## இஸ்லாமியக் கொள்கையை அறிந்து கொள்வோம்

இஸ்லாம் குறிப்பிட்ட தெளிவான சில கொள்கைகளையும் கோட்பாடுகளையும், சட்ட திட்டங்களையும் தன்னகத்தே கொண்ட சீர்மிகு மார்க்கமாகும்.

உலக மக்கள் எந்த இனத்தவராயினும், நிறத்தவராயினும், எந்த நாட்டவராயினும், மொழியினராயினும் இஸ்லாத்தின் கொள்கைகளையும், கோட்பாடுகளையும், சட்டதிட்டங்களையம் மனப்பூர்வமாக ஏற்று,

அதன்படிச் செயல்பட்டால் முஸ்லிமாகக் கருதப்படுவார்கள். இஸ்லாத்தின் கொள்கைகள் கோட்பாடுகள் மற்றும் சட்டதிட்டங்களை ஏற்க மறுத்தாலும், அதன்படி நடக்க மறுத்தாலும் முஸ்லிமாகக் கருதப்படமாட்டார்கள்.

இஸ்லாத்தின் கொள்கை கோட்பாடுகளுக்கும், சட்டதிட்டங்களுக்கும் மூலாதாரமாக அமைந்திருக்கும் அடிப்படைகள் இரண்டு:

1. இறைவேதமாகிய திருக்குர்ஆன்
2. திருக்குர்ஆனின் விளக்கமாக அமைந்துள்ள இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களின் ஆதாரப் பூர்வமான அருள்வாக்கு, அங்கீகாரம் மற்றும் (அத்தூதர் வாழ்ந்துகாட்டிய) வழிமுறை.

இஸ்லாமிய அடிப்படைக் கொள்கைகள் வருமாறு:

1. ஏக இறைவனாகிய அல்லாஹ்வை நம்புவது.
2. வானவர்கள் எனும் மலக்குகளை நம்புவது.
3. இறைவேதங்களை நம்புவது.
4. இறைத் தூதர்களை நம்புவது.
5. இறுதித்தீர்ப்பு நாளை நம்புவது.
6. நன்மையும், தீமையும் இறைவனின் நிர்ணயப்படியே நடைபெறுகின்றன என நம்புவது.

தொடரும்..

إيمان

புத்தம் புது மலராய் பூத்திருக்கும் அழைப்பொலி
சாதனைகளைப் பல புரிய இறைவனிடம் பிரார்த்திக்கின்றோம்

சென்னை நண்பன்
மாதமிருமுறை இலவச இதழ்

ஆசிரியர் : நண்பன் அபூபக்கர்

கல்வி, மருத்துவம், மதநல்லிணக்கச் சேவையில்

தொடர்புக்கு : 94444 94901, 94457 98991



# நாம் என்ன செய்ய வேண்டும்?



**(முஸ்லிம் சமூகம் தொடர்ந்து சோதிக்கப்படுவதற்கான காரணமும் கண்டடைய வேண்டிய தீர்வுகளும்!)**

*நம்மைச் சுற்றி என்ன நடந்து கொண்டிருக்கிறது? ஏன் நடந்து கொண்டிருக்கிறது? இந்த ஆட்சியாளர்களின் திட்டம்தான் என்ன? முஸ்லிம்களை எதிர்ப்பவர்களே ஆட்சிக்கட்டிலில் அமர்கிறார்களே? தொடர்ந்து முஸ்லிம்களுக்கு ஏன் இத்துணைப் பிரச்னைகள்? முஸ்லிம்கள் நிம்மதியாக வாழ முடியாதா? பயங்கரவாதிகள், பிற்போக்குவாதிகள், மதவெறிப் பிடித்தவர்கள், மதமாற்றம் செய்பவர்கள், மததுவேஷத்தைப் பரப்புபவர்கள், தேசதுரோகிகள் என்றெல்லாம் முஸ்லிம்களின் மீது அடுக்கடுக்காக பழிகள் சுமத்தப்படுகிறதே? இஸ்லாமிய நாடுகளிலும் கூட குழந்தைகள், பெண்கள், தாய்மார்கள், இளைஞர்கள், முதியவர்கள் கொல்லப்படுகிறார்களே? பள்ளிவாசல்கள் இடிக்கப்படுகிறதே? வீடுகள் அழிக்கப்படுகிறதே? குண்டு மழைகள் கொத்துக்கொத்தாக இறக்கப்படுகிறதே? முஸ்லிம்கள் தொடர்ந்து சோதனைக்கு உள்ளாக்கப்படுகிறார்களே? இவ்வாறு ஒவ்வொரு முஸ்லிமின் உள்ளத்திலும் கேள்விக் கணைகள் பாய்ந்து கொண்டிருக்கிறது. இதற்கெல்லாம் என்ன பதில்? இப்பொழுது சொல்லுங்கள் “நாம் என்ன செய்ய வேண்டும்?”*

இந்தப் பூமியில் அன்பை விதைத்து, அமைதியை வளர்த்து, சகோதரத்துவத்தை சுவைத்து, மனித நேயத்தை மிளிர்த்து அல்லாஹ்வையும் அவனது தூதரையும் அகிலத்திற்கு அறிமுகம் செய்து அல்லாஹ்வின் ஆட்சியை பூமிக்கு பறைசாற்ற வேண்டிய சமுதாயம் இன்று அரக்கர்களின் கையில் ஆட்சியை பறிகொடுத்து விட்டு நின்று கொண்டிருக்கிறது. உலகத்தை ஆள வேண்டிய முஸ்லிம்கள் இன்று அழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். சமூக வலைத்தளங்களில் ஈமான் கொண்டவர்களுடைய கண்ணீர்க் குரல்களின் ஊடுருவல்கள் பரவிக் கொண்டிருக்கறது. ஃபிர்அவ்னையே எதிர்த்து வெற்றிக் கொண்ட சமுதாயம் ஏன் இன்றைய அபுஜஹல்களைப் பார்த்துப் பதறுகிறது என்று புரியவில்லை. தெளிவானத் தீர்வைக் கண்டு நம்மை நாம் மாற்றிக்கொள்வது காலத்தின் கட்டாயம். ஆனால் தீர்வு என்ன?

### சங்கிலித்தொடராக தொடரும் சோதனைகள்

நபி(ஸல்) அவர்கள் எப்போது நபித்துவப்பட்டம் பெற்று இஸ்லாமிய மார்க்கத்தை இந்த உலகத்திற்கு சொல்ல ஆரம்பித்தார்களோ! அன்று முதலே இந்த முஸ்லிம் சமுதாயத்திற்கு சோதனைகள் சோர்வடையாமல் சங்கிலித் தொடராக முஸ்லிம்களை ஆட்டிப் படைத்துக்கொண்டிருக்கிறது. ஆனால், நபித்தோழர்களும் பின்னால் வந்த நல்லோர்களும் இந்த மார்க்கத்தை ஏற்றுக்கொண்ட ஒரே காரணத்தால் பெரும் சோதனைக்கு ஆளானார்கள். உயிரையும் பொருளையும் குடும்பத்தையும் சொத்தையும் சொந்தத்தையும் பிறந்து வளர்ந்த நாட்டையும் தியாகம் செய்தார்கள். சிறைவாசத்தை அனுபவித்தார்கள். வன்சொல்லாலும் வீண் சொல்லாலும் அவர்களை வதைத்தார்கள். இப்போது இதே பிரச்னைகளைத்தான் இன்றைய முஸ்லிம்களும் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைய கால முஸ்லிம்களும் அன்றைய கால முஸ்லிம்களும் சங்கிலித் தொடராக சோதிக்கப்பட்டாலும் சோதிக்கப்பட்ட கருப்பொருளில் ஒரு முக்கியமான சிந்தித்தறிய வேண்டிய திருத்த மாற்றம் இருக்கிறது. ஆம்! அவர்கள் சோதிக்கப்பட்டது அல்லாஹ்வை சரியான முறையில் வணங்கி வாழ்ந்தார்கள் என்பதற்காக! நாம் சோதிக்கப்படுவது அல்லாஹ்வை சரியான முறையில் வணங்கி வாழவில்லை என்பதற்காக! மேற்கூறியவற்றில் சிறிதளவு வார்த்தை வித்தியாசம் இருந்தாலும் வாழ்க்கையில் அவர்களுக்கும் இன்றைய முஸ்லிம்களுக்கும், மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசத்தைப் போன்று! அவர்கள், கஷ்டத்திலும் நஷ்டத்திலும் துயரத்திலும் துன்பத்திலும் இடுக்கிலும் இழிவிலும் உரிய முறையில் இஸ்லாமிய மார்க்கத்தைப் பேணி வாழ்ந்தார்கள் அதனால் எதிரிகளால் அதிகமாகச் சோதிக்கப்பட்டார்கள். இன்றைய முஸ்லிம்கள் வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் உரிய முறையில் இஸ்லாமிய மார்க்கத்தைப் பேணி வாழ்வதில்லை. அதனால் எதிரிகளால் அதிகமாக சோதிக்கப்படுகிறார்கள். அந்த நல்லோர்கள் அல்லாஹ்வை வணங்குவதில் தங்களுக்கு ஏற்பட்ட சோதனையை சகித்துக் கொண்டதால் அவர்களுக்கு அல்லாஹ் ஆட்சியைக் கொடுத்தான். அதிகாரத்தைக் கொடுத்தான். அமைதியைக் கொடுத்தான். மகிழ்ச்சியைக் கொடுத்தான். சொர்க்கம் உங்களுக்கு உண்டு என்ற சுபச்செய்தியையும் அறிவித்துக் கொடுத்தான். இன்றைய முஸ்லிம்கள் அல்லாஹ்வை உரிய முறையில் வணங்கி வாழாததாலேயே சோதிக்கப்படுகிறார்கள் என்றால், பின்னர் எங்கிருந்து அல்லாஹ்வின் வெற்றியை எதிர்பார்க்க முடியும்.

*“(நம்பிக்கையாளர்களே!) அல்லாஹ் உங்களுக்கு உதவி புரிந்தால் உங்களை வெற்றி கொள்பவர்கள் ஒருவருமில்லை. உங்களை அவன் (கை) விட்டு விட்டாலோ அதற்குப் பின்னர் உங்களுக்கு எவர்தான் உதவி செய்ய முடியும்?” (அல்குர்ஆன்3.160)*

### ஆட்சி வேண்டுமா? அதிகாரம் வேண்டுமா?

*அல்லாஹ் கூறுகின்றான்:*

*“(மனிதர்களே!) உங்களில் எவரேனும் மெய்யாகவே நம்பிக்கை கொண்டு நற்செயல்களையும் செய்து வந்தால், அவர்களுக்கு முன்னர் சென்றவர்களை(பூமிக்கு) அதிபதிகளாக்கியது போன்று இவர்களையும் நிச்சயமாகப் பூமிக்கு அதிபதியாக்கி வைப்பதாகவும், அவன் விரும்பிய மார்க்கத்தில் இவர்களை உறுதியாக்கி வைப்பதாகவும், அமைதியையும் பாதுகாப்பையும் கொண்டு இவர்களுடைய பயத்தை மாற்றி விடுவதாகவும் நிச்சயமாக அல்லாஹ் வாக்களித்திருக்கின்றான். (அன்றி) அவன் தன்னையே வணங்கும்படியாகவும், யாதொன்றையும் தனக்கு இணையாக்கக் கூடாது என்றும் அவன் கட்டளையிட்டிருக்கின்றான். இதன் பின்னர், எவரேனும் நிராகரிப்பவர்களாகிவிட்டால் நிச்சயமாக அவர்கள் பெரும்பாவிகள்தாம். (அல்குர்ஆன்24.55)*

*(நம்பிக்கையாளர்களே!) உங்களில் ஒரு கூட்டத்தார் (மனிதர்களை) சிறந்ததின் பக்கம் அழைத்து நன்மையைச் செய்யும்படி ஏவி, பாவமான காரியங்களிலிருந்து அவர்களை விலக்கிக் கொண்டும் இருக்கவும். இத்தகையவர்கள்தாம் வெற்றி பெற்றவர்கள். (அல்குர்ஆன்3.104)*

### கவலை வேண்டாம்! பயம் வேண்டாம்!

அல்லாஹ் மனிதர்கள் வாழ்வதற்கு வழிகாட்டிய மார்க்கம்தான் இந்த இஸ்லாம். இது அல்லாஹ்வின் கருணையாளும், அருளாளும், அங்கீகாரத்தாலும் நிறைந்துள்ளது. அவனிடத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரே மார்க்கம் இஸ்லாம்.

*“நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் அங்கீகரிக்கப்பட்ட மார்க்கம் இஸ்லாம்தான். (அல்குர்ஆன்3.19)*

*இன்றைய தினம் நாம் உங்களுக்கு உங்களுடைய மார்க்கத்தை முழுமையாக்கி வைத்து என்னுடைய அருளையும் உங்கள் மீது முழுமையாக்கி வைத்து விட்டோம். உங்களுடைய இந்த இஸ்லாம் மார்க்கத்தைப் பற்றியும் திருப்தியடைந்தோம். (அல்குர்ஆன்5.3)*

இந்த அளவு கண்ணியம் பொருந்திய இஸ்லாம் என்னும் அசைக்க முடியாத பலமுள்ள மரத்தின் பல லட்ச கிளைகளில் இலைகளாக முஸ்லிம் மக்களாகிய நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மரத்தை வேரோடு வெட்டி வீச வேண்டும் என்று எண்ணி எதிரிகள் முயன்று முடியாததால் கல்லெடுத்து கிளைகளின் மீது அடிக்கிறார்கள். பலவீன ஈமானுள்ள இலைகள் சில கல்லடிகளால் விழுந்தும் வீழ்ந்தும் விடுகின்றன. ஆனால், ஈமானில் உறுதிபடைத்த இலைகளை எந்த கல்லடியாலும் உதிரவைக்க முடியாது. அந்த இலைகள் தங்களின் விடா முயற்சியால் கனிகளாக மாறிக்கொண்டிருக்கின்றன. எனவே, படைத்த இறைவனின் உண்மை பிரதிநிதிகளை யாரும் ஒன்றும் செய்துவிட முடியாது.

**இக்காலச் சூழ்நிலையில் சூனியக்காரர்களுக்கும் மூஸா(அலை) அவர்களுக்கும் நடந்த போட்டி நினைவுக்கு வருகிறது. சூனியக்காரர்கள் தடிகளை எறிந்து பாம்பு போல நெளிய வைத்தார்கள். ஆனால், அது உண்மையான பாம்புகள் இல்லை. பின்பு மூஸா (அலை) அவர்கள் தன் தடியை கீழே போட்டார்கள். அது உண்மையான பாம்பாகவே மாறி மற்றதை விழுங்கிவிட்டது. அதுபோன்று தற்கால வஞ்சகர்கள் அநீதியிழைத்தல், அராஜகம் செய்தல், அக்கிரமத்தை கட்டவிழ்த்து விடுதல், மததுவேஷம், ஊழல், கொலை, கொள்ளை என அசத்தியம் என்னும் தடிகளைக் கொண்டு மக்களை இது உண்மையான பாம்புதான் என்று அச்சுறுத்துகிறார்கள். எனவே, நாம் சத்தியம் என்னும் நிஜ தடியைக் கொண்டு இந்த அசத்தியப் பாம்புகளை விழுங்கிட வேண்டும்.**

*“அன்றி, சத்தியம் வந்தது அசத்தியம் மறைந்தது. நிச்சயமாக அசத்தியம் அழிந்தே தீரும். என்றும் கூறுங்கள். (அல்குர்ஆன்17:81)*

*“இன்னும், அவர்கள் தங்கள் இறைவனின் திருப்பொருத்தத்தைக் கோரி (எத்தகைய கஷ்டத்தையும்) பொறுமையுடன் சகித்துக் கொள்வார்கள். தொழுகையையும் கடைபிடிப்பார்கள். நாம் அவர்களுக்கு அளித்தவற்றை ரகசியமாகவும் வெளிப்படையாகவும் (நல்வழியில்) செலவு செய்வார்கள். நன்மையைக் (கைக்) கொண்டே தீமையைத் தவிர்த்து விடுவார்கள். இத்தகையவர்களுக்கு (மறுமையில்) நல்ல முடிவு உண்டு. (அல்குர்ஆன்13.22)*

### நாம் செய்ய வேண்டியது இதுதான்!

நாம் செய்ய வேண்டியது உடனடியாக வீட்டிற்கு ஓர் அழைப்பாளரை தயார்படுத்த வேண்டும். தெளிவான கல்வி, திறம் கொண்ட வாய்மை, நிறைவான நேர்மை, நிலையான நற்குணங்கள் ஆகியவைகளைக் கொண்ட அழைப்பாளர் சமூகத்தை உருவாக்க வேண்டும். உருவாக வேண்டும். அவரவர் தத்தம் பகுதிகளிலுள்ள மக்களுக்கு இஸ்லாமிய அழைப்பு கொடுக்கும் பொறுப்பை கையிலெடுக்க வேண்டும். நன்மையை ஏவி தீமையை தடுக்க வேண்டும். குறிப்பாக கெட்ட பண்புகளை விட்டொழிக்க வேண்டும். நேரத்தை நேர்த்தியாக பயன்படுத்திக் கொள்ளவேண்டும். பகைமையை தூக்கியெறிந்து சகோதரத்துவத்தை நிலை நிறுத்த வேண்டும். இவையனைத்தையும் உடனடியாக செயல்படுத்தவது காலத்தின் கட்டயாம். ஆனால் அதில் பொறுமையும் சகிப்புத்தன்மையும் மிக அவசியம்.

*“நீங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து அல்லாஹ்வுடைய (வேதம் என்னும்) கயிற்றை பலமாகப் பற்றிப்பிடித்துக் கொள்ளுங்கள். (உங்களுக்குள் தர்க்கித்துக் கொண்டு) நீங்கள் பிரிந்திட வேண்டாம்.” (அல்குர்ஆன்3.103)*

*“நம்பிக்கையாளர்களே! நீங்கள் பொறுமையைக் கடைப்பிடியுங்கள். ஒருவருக்கொருவர் சகித்துக் கொள்ளுங்கள். எந்நேரமும் தயாராக இருங்கள். அல்லாஹ்வுக்குப் பயந்து (நடந்து) கொள்ளுங்கள். நீங்கள் (இம்மையிலும் மறுமையிலம்) வெற்றியடைவீர்கள். (அல்குர்ஆன்3.200)*

**– இப்னு சர்தார்**




# ரமளானின் இறுதிப் பத்து நாள்கள்



**சி**றப்பானவையும், அதிக முக்கியத்துவம் வாய்ந்தவையும் ஏன் எப்பொழுதும் இறுதியாகவே இருக்கின்றன என்று நான் அதிகம் வியந்துள்ளேன். ரமளான் மாதத்திற்கும் இது பொருந்தும். ரமளானின் ஒவ்வொரு நாளும் முக்கியத்துவம் வாய்ந்தவையே. அதன் இறுதிப் பத்து நாள்கள் கூடுதல் முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளன.

ரமளான் தொடங்கும்போது நல்ல உற்சாகத்துடனும், ஆர்வத்துடனும்தான் ஆரம்பிக்கின்றனர். ஆனால் நிறையப் பேருக்கு வாய்ப்புக்கேடாக, அந்த ஆர்வமும் உற்சாகமும் போகப்போக குறைந்து விடுகின்றது. பின்பு எதற்காக ரமளானின் மிகச் சிறந்த மாபெரும் ஒற்றைப்படை இரவுகள்?

அல்லாஹ், அளவற்ற அருளாளனும் மிகச்சிறந்த கருணையாளனுமாக இருக்கின்றான். தன்னை நெருங்குவதற்கு நமக்கு அனைத்து விதமான சந்தர்ப்பங்களையும் அளிக்கின்றான். இம்மாதத்தின் இறுதிப் பத்து நாள்களும் அவனுடைய கருணையின் அடையாளமே. இந்தச் சிறப்பான இரவுகள் ஏன் ரமளானின் ஆரம்பத்திலேயே இல்லை என்று நாம் எண்ணும் அதேவேளை, இவை ஆரம்ப நாள்களிலேயே இருந்துவிட்டால் மீதமுள்ள நாள்கள் என்னவாகும் என்பதை நாம் எண்ணுவதற்குத் தவறிவிடுகின்றோம்.

முதல் பத்து நாள்கள் கருணைக்கும், அடுத்த பத்து நாள்கள் மன்னிப்பிற்கும், அதற்கடுத்த இறுதிப் பத்து நாள்கள் நரக நெருப்பிலிருந்து விடுதலை அடைவதற்கும் என்று மூன்று பாகங்களாகப் பிரித்துள்ளதன் பின்னணியிலுள்ள நுட்பத்தில், நம்மைப் படைத்தவனின் பரந்த ஞானமும், பேரறிவும் அடங்கியுள்ளது. அவனுக்கு நம்முடைய இயல்பும் நடத்தையும் நன்கு தெரியும் என்பதால், இவ்வாறு கச்சிதமாகத் திட்டமிட்டுள்ளான். இத்தகைய மாபெரும் கருணையை அல்லாஹ்விடமிருந்து பெற்றுக் கொண்டதற்கு நன்றி செலுத்தும் ஒரே வழிமுறை, வரவிருக்கும் அந்தப் பத்து நாள்களையும் மிகச்சிறந்த முறையில் பயன்படுத்துவதே ஆகும்.

இது இறைவனிடமிருந்து வந்துள்ள கருணை என்பது ஒருபுறம் இருந்தாலும், அது நம்மை நரக நெருப்பிலிருந்து காக்கக்கூடிய நல்வாய்ப்பாகவும் இருக்கின்றது. நம்மால் ஆயிரம் மாதங்களுக்கு வாழ்ந்திட முடியாமல் இருந்தாலும் கூட நம் கைகளிலுள்ள இந்த ஒற்றைப்படை இரவுகளை மிகச்சிறந்த வழியில் பயன்படுத்தினால், ஆயிரம் மாதங்கள் செய்த நற்செயல்களின் கூலி நம்முடைய கணக்கில் சேர்க்கப்படும்.

இறைத்தூதர் (ஸல்) கூறினார்கள்: "உங்களிடம் ரமளான் மாதம் வந்தடைந்துள்ளது. அது ஒரு அருள்நிறைந்த மாதமாகும். அம்மாதத்தில் நோன்பு நோற்க இறைவன் உங்களுக்குக் கட்டளையிட்டுள்ளான். அம்மாதத்தில் சுவன வாயில்கள் திறந்து வைக்கப்படுகின்றன. நரக வாசல்கள் மூடி வைக்கப்படுகின்றன. மேலும் ஷைத்தான்கள் விலங்கிடப்படுகின்றன. அதில் ஆயிரம் மாதங்களை விடச் சிறந்த ஓர் இரவு இருக்கிறது. அதனுடைய நன்மைகளை யார் பயன்படுத்திக் கொள்ளாமல் இழந்து விடுகின்றாரோ அவர் உண்மையில் அனைத்தையும் இழந்தவராவார்." (அஹ்மத்)

இறைத்தூதர் (ஸல்) கூறினார்கள்: "லைலத்துல் கத்ர் எனும் இரவை இறுதிப் பத்து நாள்களில் ஒற்றைப்படை இரவுகளில் தேடுங்கள்." (புஹாரி)

எந்தவொரு இறுதிப் போட்டிக்கும் தயார் செய்வது போலவே, உடலளவிலும், மனதளவிலும் இந்த ரமளானுடைய இறுதிப் பத்து நாள்களைச் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளச் செய்ய வேண்டிய சிலவற்றின் பட்டியல் இங்கு கொடுக்கப்பட்டுள்ளது.

முழு மூச்சோடு இறுதிப் பத்து நாள்களுக்கும் குறிப்பாக பத்து இரவுகளுக்கும் தயாராக வேண்டும்:

நேரம் மிகமிக முக்கியத்துவம் வாய்ந்தது. அதிலும் வரவிருக்கும் இந்த இறுதிப் பத்து நாள்கள் இன்னும் கூடுதல் முக்கியத்துவம் பெறுகிறது. ஒவ்வொன்றும், எதுவொன்றும் பலமடங்காகப் பெருகும் வாய்ப்பு உள்ளது. இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களைத் தவிர வேறு யாராலும் இந்த இரவின் சிறப்புகளை அறிந்திருக்க முடியாது.

ஆயிஷா (ரலி) கூறுகின்றார்கள்: ரமளானின் இறுதிப் பத்து நாள்கள் ஆரம்பித்துவிட்டால் நபி (ஸல்) அவர்கள் இரவில் விழித்திருந்து, தம்முடைய குடும்பத்தாரையும் எழுப்பிவிட்டு கச்சை கட்டிக் கொண்டு தயாராகி விடுவார்கள்.

நபி (ஸல்) அவர்களே இந்த அளவிற்கு அதிகமாக இந்நாள்களில் வழிபாடு செய்துள்ளார்கள் எனில், நாம் இன்னும் அதிகமாக அல்லவா உழைக்க வேண்டியுள்ளது. எனவே நாம் நம்மையும் நம் குடும்பத்தினரையும் உற்சாகப்படுத்தி, வரவிருக்கும் நாள்களை மிகச்சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

பயபக்தி உடையவர்களை அல்லாஹ் திருக்குர்ஆனில் விவரிக்கின்றான்:

"இரவு நேரங்களில் குறைவாகவே தூங்குபவர்களாகவும், பின்னிரவு நேரங்களில் பாவமன்னிப்பு கோருபவர்களாகவும் இருந்தார்கள்." (51: 17–18)

**குர்ஆனை இறுகப் பற்றிக்கொள்ள வேண்டும்:**

இந்நாள்களின் மீது குர்ஆனுக்கு உள்ள தாக்கத்தைக் குறிப்பிட வார்த்தைகளோ, வாக்கியங்களோ போதாது. அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னு அல் ஆஸ்(ரலி) அறிவிக்கின்றார்கள்: நபி (ஸல்) கூறினார்கள்: எவரொருவர் கியாமில் (நின்று வணங்குதல்) குர்ஆனின் பத்து வசனங்களை ஓதுகின்றாரோ அவர் மறந்துபோய்விட்டவர்களின் பட்டியலில் இடம்பெறமாட்டார். எவரொருவர் நூறு வசனங்களை ஓதுகின்றாரோ அவர் பயபக்தியுடையோரில் எழுதப்படுவார். எவரொருவர் ஆயிரம் வசனங்களை ஓதித் தொழுகின்றாரோ அவர் முகந்தரீன்களின் (முகன்தரீன் நற்செயல்களைக் குவியலாகச் செய்தவர்கள்) பட்டியலில் எழுதப்படுவார். (அபூதாவூத், இப்னு ஹிப்பான்)

அல்லாஹ் கூறுவதைப் போன்று இம்மாதத்தில் திருக்குர்ஆனை ஓதி உணராதவன் பாக்கியமற்றவனாவான். (38: 29)

"நபியே! இதனை நாம் உம்மீது இறக்கி அருளியுள்ளோம். இந்த மக்கள் இதனுடைய வசனங்களைச் சிந்திக்க வேண்டும்; அறிவுடையோர் இதிலிருந்து படிப்பினை பெற வேண்டும் என்பதற்காக!"

**பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கான நேரம் இது:**

நம்முடைய பாவங்கள் நம்மைப் பிடித்துக் கொண்டு, கனமாகவும் நமது தோள்களின் மீது பாரமாகவும் இருப்பதாக உணர்ந்தோமானால் இதுதான் அவற்றிலிருந்து விடுபட்டுப் பாவ மன்னிப்புக் கோருவதற்கான சரியான சந்தர்ப்பமாகும். பாவங்கள் தொற்றுநோயைப் போன்றவை.

அபூஹுரைரா (ரலி) அறிவிக்கின்றார்கள், நபி (ஸல்) கூறினார்கள்: "எவரொருவர் நம்பிக்கையோடும், நற்கூலியை எதிர்பார்த்தும் லைலத்துல் கத்ர் இரவினை தொழுகை, வணக்க வழிபாடுகளில் கழிக்கின்றாரோ அவருடைய பாவங்கள் யாவும் மன்னிக்கப்படும்."

**நோன்பின் இரவுகளில் ஓதுவதற்கு நபியவர்களால் கற்பிக்கப்பட்ட துஆ:**

**ஆயிஷா (ரலி) கூறினார்கள், "யா ரசூலுல்லாஹ்! லைலத்துல் கத்ர் இரவு இதுதான் என்று நான் அறிந்து கொண்டால், நான் என்ன ஓத வேண்டும்?" நபி (ஸல்) கூறினார்கள், "அல்லாஹும்ம இன்னக்க அஃபூவன் துஹிப்புல் அஃப்வ ஃபஃஹ்ஃபு அன்னீ" என்று கூறுங்கள்".**

**"யா அல்லாஹ்! நீயே மன்னிப்பவன், மன்னிப்பதை விரும்புபவன். எனவே என்னை மன்னித்தருள்வாயாக".**

அது எந்த இரவு என்பது மறைவாக வைக்கப்பட்டுள்ளதால், இறுதிப் பத்து நாள்களுமே இந்த துஆவை நாம் ஓதிட வேண்டும்.

நமக்குத் தேவையான அனைத்தையும் யோசித்து வைத்துக்கொண்டு, அல்லாஹ்விடம் அதனைக் கேட்க இதுவே சரியான தருணம் என உணர்ந்து கொண்டு அவனிடம் அதிகம் நெருங்க வேண்டும். இதற்கு முன் நாம் இதனைச் செய்திராவிட்டால் இதுதான் அவனுடன் தொடர்பு கொள்ள சரியான நேரமாகும். அவனது உள்ளமையை உணர்ந்து கொள்ளவும், நம்முடைய அதிபதியைத் தொடர்பு கொள்ளவும் வேண்டும். ரமளானின் இறுதிப் பத்து நாள்களில் நாம் இதனைச் செய்தோமானால் அம்மாதம் முடிந்த பிறகும்கூட அவ்வாறே செய்திட நாம் விரும்புவோம்.

இறுதியாக, தொழுகை, இபாதத் எனும் நிலையில் நாம் இருக்கும்போது நமது உள்ளத்தை நம்முடைய இஸ்லாமிய சகோதர சகோதரிகளுக்காகவும் திறந்து விடுவோம். பின்வரும் ஹதீஸில் கூறப்பட்டுள்ளதைப் போல, "ஒரு முஸ்லிமுக்கு அவன் இல்லாத போது மற்றொரு முஸ்லிமால் செய்யப்படும் பிரார்த்தனைக்கு விரைவாகப் பதிலளிக்கப்படும்". (அபூதாவூத், திர்மிதி)

இம்மாதத்தினை மிகச்சிறந்த முறையில் பயன்படுத்திக்கொள்ள எல்லாம் வல்ல அல்லாஹ் நம் அனைவருக்கும் வழிகாட்டுவானாக!

**– அஃப்னான்**

# திருக்குர்ஆன் போதிப்பது இதுதான்!...



இஸ்லாம் ஒரு மதமல்ல. அது ஒரு வாழ்வியல் வழி. மனிதன் பிறந்தது முதல் இறப்பது வரை எப்படி வாழ வேண்டும் என்று தெள்ளியதோர் வழியைக் காட்டுகிறது. இதை உளமாற ஏற்றுக் கொண்ட முஸ்லிம்கள் தங்கள் வாழ்வில் அதை நடைமுறைப்படுத்தி பிற மதத்தைச் சார்ந்தவர்களுக்கும் எடுத்துரைத்துக் கொண்டிருக்கின்றனர். இருப்பினும் சில பெயர்தாங்கி முஸ்லிம்கள் செய்யும் இழி செயல்களால் இஸ்லாமிய மார்க்கமே அவ்வப்போது விமர்சனத்திற்கு உள்ளாகிறது. அதைக் கலைக்க வேண்டியது ஒவ்வொரு முஸ்லிமின் கடமையாகவும் உள்ளது.

எங்களோடு இணைந்து நேசம் கொண்டு வாழும் எங்களின் பிற மதம் சார்ந்த சகோதரர்களுக்கும் நாத்திகச் சகோதரர்களுக்கும் இஸ்லாமிய மார்க்கத்தை அறிமுகம் செய்வதே இந்தப் பக்கத்தின் நோக்கம். இஸ்லாம் என்பது, படைத்த ஒரே இறைவனால் நபிகள் நாயகத்திற்கு 23 ஆண்டுக் காலம் சிறிது சிறிதாக அருளப்பட்ட திருக்குர்ஆனும். திருக்குர்ஆனாகவே தன்னுடைய வாழ்க்கையை அமைத்துக் கொண்ட நபிகள் நாயகத்தின் வாழ்க்கையுமாகும்.

வாய்ப்புக்கேடாக திருக்குர்ஆன் தீவிரவாதத்தையும் மதத்துவேஷத்தையும் அமைதியின்மையையும் போதிக்கின்றது என்ற தவறான பிம்பம் இன்று மக்கள் மத்தியில் விதைக்கப்பட்டுள்ளது.

எனவே, திருக்குர்ஆன் அப்படி என்னதான் சொல்லுகிறது என்ற சந்தேகத்தை உடையவர்களாக நீங்கள் இருக்கலாம். கீழே கொடுக்கப்பட்டுள்ள அனைத்தையுமே திருக்குர்ஆன் மனித சமூகத்திற்கு போதிக்கிறது.

ஒப்பந்தங்களை முறித்து மாறு செய்யக் கூடாது. (திருக்குர்ஆன் 2:27 16:92)

இரத்த உறவுகளை முறிக்கக் கூடாது. சேர்ந்து வாழ வேண்டும். (திருக்குர்ஆன் 2:27 47:22)

உண்மையை பொய்யுடன் கலக்கக் கூடாது. உண்மையை மறைக்கவும் கூடாது. (திருக்குர்ஆன் 2:42)

நீங்கள் செய்யாமல், ஊருக்கு மட்டும் உபதேசம் செய்யக் கூடாது. (திருக்குர்ஆன் 2:44 61:2)

பூமியில் குழப்பம் செய்து திரியக் கூடாது. (திருக்குர்ஆன் 2:60)

ஆன்மீக ஏமாற்றல் செய்து பிழைக்கக் கூடாது. (திருக்குர்ஆன் 2:79)

பெற்றோருக்கும் நெருங்கிய உறவினருக்கும் அனாதைகளுக்கும், ஏழைகளுக்கும் நன்மை செய்ய வேண்டும். மனிதர்களுக்கு நல்ல வார்த்தையையே கூற வேண்டும். (திருக்குர்ஆன் 2:83)

உங்களுக்கு எதிராக நடப்பவர்களையும் மன்னியுங்கள். (திருக்குர்ஆன் 2:109)

நல்லவற்றை/ தூயவற்றையே சாப்பிட வேண்டும். (திருக்குர்ஆன் 2:168 ,172)

செல்வங்களை உறவுகளுக்கும், அநாதைகளுக்கும், ஏழைகளுக்கும், யாசிப்பவருக்கும், அடிமைகளுக்கும் கொடுத்து, ஒப்பந்தங்களை நிறைவேற்ற வேண்டும். (திருக்குர்ஆன் 2:177)

மற்ற மனிதர்களின் சொத்துகளை அபகரிக்க கூடாது. இலஞ்சம் கொடுக்கக் கூடாது. (திருக்குர்ஆன் 2:188)

எதிரிகள் சமாதானத்தை விரும்பினால், சமாதனமாக வேண்டும். (திருக்குர்ஆன் 8:61)

அப்பாவிகளை பலவீனர்களை காப்பாற்றவே போர் செய்ய வேண்டும். (திருக்குர்ஆன் 4:75)

பூமியில் குழப்பம் செய்ய, விவசாயத்தை அழிக்க கூடாது.. (திருக்குர்ஆன் 2:205)

நல்ல வழியில் அநாதைகளுக்கு, குடும்பத்திற்கு, வழிப்போக்கர்களுக்கு தர்மம் செய்ய வேண்டும். (திருக்குர்ஆன் 2:215)

மதுபானம் சூதாட்டம் கூடாது. (திருக்குர்ஆன் 5:90)

அநாதைகளை சீர்திருத்தி பராமரிக்க வேண்டும். (திருக்குர்ஆன் 2:220)

தர்மத்தை தனக்கு தரும் கடனாக இறைவன் பார்க்கிறான். அக்கடனை திருப்பி கொடுத்து விடுவான். (திருக்குர்ஆன் 2:245)

இஸ்லாமிய மார்க்கத்தில் நிர்பந்தம் இல்லை. (திருக்குர்ஆன் 2:256 10:99 18:29)

உங்களையும் உங்கள் முன்னோர்களையும் படைத்த இறைவன் ஒருவனையே வணங்க வேண்டும். (திருக்குர்ஆன் 2:21)

தொடரும்...

## ஜகாத்துக் கடமை

வறுமைக் கோட்டைத் தாண்டுவதே
வாழும் எளியோர் நோக்கமெனில்
பொறுமை யுடனே செல்வரிடம்
போய்த்தம் நிலையைக் கூறிடலாம்.

ஈகை யுடைய இதயத்தார்
இருகை நிறையப் பொருளீந்து
தோகை விரித்து மயிலாடும்
தோற்றம் பெற்று மகிழ்ந்திடுவார்!

ஈரம் இல்லாக் கஞ்சர்கள்
“இல்லை இங்கே” என்றிடுவார்
நேரம் ஒன்று வரும்போது
நிறைந்த செல்வம் பறிபோகும்!

குறையை உடைய எட்டுவகைக்
கூட்டம் குர்ஆன் வகுத்தபடி
முறையைப் பேணிக் கொடுப்பதுவே
முதலோன் காட்டிய வழியாகும்.

முறையாய் ஜக்காத் கொடுத்தாலே
முற்றும் வறுமை நீங்கிவிடும்
குறைவாய்ச் சில்லறைக் காசுகளைக்
குறைவாயச் சில்லறைக் காசுகளைக்
கொடுப்ப தெல்லாம் ஜகாத்தில்லை.

கல்வி தொடர, நோய்நீங்கக்
கருணை உளத்தால் நம்முடைய
செல்வம் உதவும் போதெல்லாம்
செம்மை பெறுவோம் ஜக்காத்தால்.

கொடுப்ப தெல்லாம் ஏழைக்கே
குறித்து வைப்பான் இறையேட்டில்
இருப்ப தொன்றும் குறையாமல்
ஏற்றம் ஆவதை உணர்ந்திடுவோம்!

எடுத்த ளிக்கக் காசாசை
இல்லா “பைத்துல் மால்” இடமே
கொடுத்து நம்மை மகிழ்விப்பார்.

ஒவ்வோ ராண்டும் ஜகாத்தை
உயர்ந்த நன்மை நோக்குடனே
செவ்வை யாகக் கொடுத்தாலே
சிறந்த நன்மை பெற்றிடலாம்.

பொருளில் தூய்மை உடைத்தாகிப்
பொதுமை நோக்கில் வறியோர்க்கே
அருளைத் தருவான் இறைஎன்றே
ஆசை யுடனே வழங்கிடுவோம்!

– அதிரை அஹ்மத்